பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 08 2024 **WEDNESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. அஸ்ஸாம், பீகார் உட்பட ஒன்பது மாநிலங்களிலிருந்து, மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் 3-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2. கடலோர பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் வணிக நிறுவனங்களின் பெயர் பலகை தமிழில் இடம்பெற செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. நேபாளத்தில் மழை மற்றும் நிலச்சரிவு காரணமாக 12 பேர் உயிரிழந்தனர்.

5. பாரிஸ் ஒலிம்பிக் கோல்ஃப் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் அதிதி அசோக் முதலிடத்தில் உள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

அஸ்ஸாம், பீகார், ஹரியானா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, ராஜஸ்தான், திரிபுரா, தெலங்கானா, ஒடிஷா மாநிலங்களிலிருந்து மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் 3-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 14-ஆம் தேதி தொடங்குகிறது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய 21-ஆம் தேதி கடைசி நாளாகும்.

அதற்கு மறுநாள் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.

அஸ்ஸாம், மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா மற்றும் திரிபுராவை பொறுத்தவரை வேட்புமனுக்களை விலக்கிக்கொள்வதற்கு வரும் 26-ஆம் தேதி கடைசிநாளாகும்.

பீகார், ஹரியானா, ராஜஸ்தான், தெலங்கானா மற்றும் ஒடிஷாவை பொறுத்தவரை இது 27-ஆம் தேதியாக இருக்கும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

போட்டி இருக்கும் பட்சத்தில் தேர்தல் நடைபெறும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இரண்டு நாள் அரசு முறைப்பயணமாக இன்று நியூசிலாந்து சென்றடைந்தார்.

ஃபிஜியில் அரசு முறைப்பயணத்தை முடித்துக்கொண்டு நியூசிலாந்து சென்ற குடியரசுத் தலைவருக்கு, ஆக்லாந்து விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த இரண்டு நாள் பயணத்தின்போது, அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து குடியரசுத் தலைவர் பேச்சு நடத்தவுள்ளார்.

வெலிங்டனில் நடைபெறவுள்ள சர்வதேச கல்வி மாநாட்டிலும் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆக்லாந்தில் இந்திய வம்சாவளியினருடனும் திருமதி திரௌபதி முர்மு கலந்துரையாட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் ஆயிரத்து 702 ரயில் நிலையங்களில் ஒரு பொருள் – ஒரு ரயில் நிலையம் திட்டம் செயல்பாட்டில் உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின்கீழ் 79 கோடி ரூபாய் அளவிற்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருப்பதாக கூறினார். இதன்மூலம், 67 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

உணவு கிடங்குகள் மற்றும் உணவுப்பொருட்கள் விநியோகத்தின்போது அவை வீணாவது பெருமளவு குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இது தொடர்பான புள்ளி விவரங்களையும் எடுத்துரைத்தார்.

<<<<<<>>>>>

வறுமையை அகற்றுவதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ராவ் இந்திரஜித் சிங் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கடந்த பத்தாண்டுகளில் 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையின் பிடியில் இருந்து மீட்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வெங்காய ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்ட பின்னர், கடந்த மாதம் இறுதிவரை 2 லட்சத்து 60 ஆயிரம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த உணவுத்துறை இணையமைச்சர் திரு பி எல் வர்மா, வெங்காய ஏற்றுமதிக்கான தடை மே மாதம் 4-ஆம் தேதி நீக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகை 95 சதவீதம் வழங்கப்பட்டுள்ளதாக உணவுத்துறை இணையமைச்சர் திருமதி **Nimuben Jayantibhai Bambhaniya** கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கரும்பு ஆலைகள், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கரும்புக்கான தொகையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் செயல்பாட்டில் உள்ளதாக கூறினார்.

<<<<<<>>>>>

கடலோர பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல்வேறு உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நாடு முழுவதும் கடலோரப்பகுதிகளில் 204 கடல்சார் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

கடல்சார் பாதுகாப்பிற்கான பயிற்சி மையம் குஜராத்தில் செயல்பட்டுவருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடலோர பாதுகாப்புப்படையினருக்கு தேவையான அனைத்து பயிற்சிகளும் இந்த மையத்தில் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

கடலோர பகுதிகளில் மூன்றடுக்கு பாதுகாப்பு செயல்பாட்டில் உள்ளதாகவும் திரு நித்யானந்த ராய் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பெண் தொழில் முனைவோர்களை உருவாக்குவதற்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதற்காக மத்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை பட்டியலிட்டார்.

பெண்கள் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

பால் பதப்படுத்துதல் மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின்கீழ் 42 லட்சத்திற்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய பால்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், இதில் 12 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பெண்கள் என்றும் கூறினார்.

இந்த திட்டம் 29 ஆயிரத்து 110 கோடி ரூபாய் செலவில் அடுத்த இரண்டாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் கடந்த ஐந்தாண்டுகளில் 149 தனியார் பல்கலைக்கழகங்களுக்கு, பல்கலைக்கழக மானியக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று மாநிலங்களவையில் இதனை தெரிவித்த கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் **Sukanta Majumdar** , தன்னாட்சி அந்தஸ்து கோரி 806 பரிந்துரைகள் பல்கலைக்கழக மானியக்குழுவிடம் கிடைக்கப்பெற்றதாக கூறினார்.

இதில் 613 பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும் டாக்டர் **Sukanta Majumdar** தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வணிக நிறுவனங்களின் பெயர் பலகை தமிழில் இடம்பெற செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதனை மீறுபவர்களுக்கான அபராதத் தொகையும் தற்போது உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தொழிலாளர் நலத்துறையுடன், தமிழ் வளர்ச்சித்துறை இணைந்து மேற்கொள்ளும் என்றும் திரு சாமிநாதன் கூறினார்.

<<<<<<>>>>>

புதுச்சேரி துணைநிலை ஆளுநராக திரு கைலாஷ் நாதன் இன்று பதவியேற்றுக்கொண்டார்.

புதுச்சேரி ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி திரு கிருஷ்ணகுமார் அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

முதலமைச்சர் திரு ரங்கசாமி, அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

ஹரியானாவின் சிர்சா மாவட்டத்தில், மொபைல் இணையதள சேவை அடுத்த மாதம் 8-ஆம் தேதிவரை ரத்து செய்யப்படுவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

சட்டம் - ஒழுங்கு சூழ்நிலையை கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

பங்களாதேஷில் வசிக்கும் இந்தியர்கள் தேவையின்றி வெளியே வருவதை தவிர்க்குமாறு அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

பங்களாதேஷில் தற்போது நிலவும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

உதவி தேவைப்படும் இந்தியர்கள் தூதரக அலுவலகத்தை தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கென 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

நேபாளத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக 12 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர், 4 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

**Baglung** மற்றும் **Gumli** பகுதியில் இந்த நிலச்சரிவுகள் ஏற்பட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் கடந்த ஜூன் மாதம் 10-ஆம் தேதி பருவமழை தொடங்கியதில் இருந்து மழை தொடர்பான பேரிடர்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 165-ஆக அதிகரித்துள்ளது என்றும் அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் கோல்ஃப் போட்டியின் முதல் சுற்று முடிவில் இந்தியாவின் அதிதி அசோக் முதலிடத்தில் உள்ளார்.

**Diksha Dagar** ஏழாவது இடத்தில் உள்ளார்.

மேலும் மூன்று சுற்று ஆட்டங்கள் அடுத்த மூன்று நாட்களில் நடைபெறவுள்ளன.

---

மல்யுத்த போட்டியில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக இன்று இறுதிப்போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பினை அவர் இழந்தார்.

50 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்றுள்ள வினேஷ் போகத்தின் எடை இன்று காலை 100 கிராம் அதிகமாக இருந்ததையடுத்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

தகுதி நீக்கத்தை எதிர்த்து, இந்திய ஒலிம்பிக் சங்கம் சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

------------

இலங்கைக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 249 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 12 புள்ளி நான்கு ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 82 ரன் எடுத்துள்ளது.

கொழும்பில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 248 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Avishka Fernando** 96 ரன் எடுத்தார்.

**Riyan Parag** மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

------------

பிரிஸ்பேனில் நடைபெற்ற இந்தியா ஏ அணிக்கு எதிரான மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா ஏ அணி ஐந்து ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<<<<<<END>>>>>